நெல்லுடைக்கும்
மா அரைக்கும் இயந்திர
உதிரிப்பாகங்கள்
மற்றும்
பொலித்தீன்,
கேக், குளிர்பான
தயாரிப்புக்களுக்கு
ராஜூ
ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 20269 ஆனி 29 வியாழக்கிழமை (13 - 07 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 229

கைக்கடிகாரம்!
அழகுசாதன, அன்பளிப்பு,
எவர்சில்வர்,
விளையாட்டுப்
பொருள்களுக்கு
நாடுங்கள்!
ராஜூ
ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார்வீதி.
யாழ்ப்பாணம்.

ராணுவ நடவடிக்கை தொடரும்

படை வட்டாரங்கள் அறிவிப்பு

'புக்காரா' தாக்குதலில் சங்கரத்தையில் ஒருவர் பலி!

மற்றும் இருவர் காயமுற்றனர்

சங்கரத்தைப் பகுதியில் நேற்றுக்காலை11 30மணிக்கு புக்காராவிமானத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சு தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார்; மற்றும் இருவர் படுகாயமடைந்தனர்; இவர்களுடன் கூடஇருந்தவர்கள் சிதறி ஓடிக்காயமின்றித் தப்பித்துக் கொண்டனர்.

இச்சம்பவத்தில் யாழ்ப்பாணம் ஐந்துசந்திப் பகுதியில் வசிக்கும் குமாரசாமி பத்மநாதன் [வயது24] என்பவரே மரணமானவராவார். இவர் சரவணையில் இருந்து இடம் பெயர்ந்தவராவார்.

தாக்குதலின் போது வயிற்றில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டபோதே மரணமானார்.

கச்சேரியடி றக்காவீதியைச் சேர்ந்த அருளப்பு குணம் (வயது 28), நல்லூரைச் சேர்ந்த சகாயராசா சந்திரகுமார் [வயது 17] ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர். இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [உ-15]

வட்டுக்கோட்டைப் பகுதியில் 'புக்காரா' குண்டு வீச்சு!

காயமுற்றவர் யாழ் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஜூலை 13

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் பகுதியில் நேற்று முன்தினம் புக்காரா குண்டு வீச்சில் காயமுற்ற ஒருவர் நேற்று யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டார்.

நேற்று முன்தினம் மாலை வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் பகுதியில் இடம்பெயர்ந்தவர்கள் இருந்த அகதி முகாம் ஒன்றின் மீதே இக்குண்டு வீச்சு இடம்பெற்றது.

முகாமில் இருந்த காரைநகரைச் சேர்ந்த — மயிலன் பொன்னுத்துரை (வயது 60) என்பவரே காயமடைந்தவராவார்.

இச்சம்பவத்தின் போது முகாமில் சில வீடுகள் தீப்பற்றியதாக காயமடைந்தவரால் தெரிவிக்கப்பட்டது.

அராலிப் பாலம் தகர்க்கப்பட்டது?

கொழும்பு, ஜூலை 13

அராலிப் பாலம் தகர்க்கப்பட்டதாக ஸ்ரீலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் — காரைநகர்ப் பாதையில் உள்ள இந்தப் பாலத்தை நேற்று நண்பகல் 12.15 மணியளவில் விடுதலைப்புலிகள் தகர்த்ததாகவும் —

மண்டைதீவில் நிலைகொண்டுள்ள படையினர் அதனை அவதானித்ததாகவும் —

இப்பாதை ஊடாக இராணுவத்தினர் முன்னேறுவதைத் தடுக்கவே புலிகள் இந்தப் பாலத்தைத் தகர்த்தனர் என்றும் —

இலங்கைப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் இப்பாலத்தின் ஊடாக விடுதலைப்புலிகள் முன்னேறித் தாக்கலாம் என்ற அச்சத்தில் "புக்காரா" மூலம் அடுத்தடுத்து குண்டு வீசி இதனைத் தகர்ப்பதற்கு அரச படைகள் முயல்வதாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

எனினும் —

பாலம் தகர்க்கப்பட்டதா என்பதையும் —

அது எவ்வாறு தகர்க்கப்பட்டது என்பதையும் —

ஊர்ஜிதப்படுத்தும் தகவல் ஏதும் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை. [உ]

அதிகாரிகள் உட்பட 20 படையினர் பலி

யாழ்ப்பாணம், ஜூலை 18

வலிகாமம் மேற்கு மற்றும் வலிகாமம் வடக்குப் பகுதிகளில் ஸ்ரீலங்காப் படையினர் கடந்த நான்கு நாட்களாக மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகளில் அதிகாரிகள் உட்பட 20 இராணுவத்தினர் வரை பலியானதாகவும்—

163 இராணுவத்தினர் காயமுற்றதாகவும்—

கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்ஸிகள் இத்தகவலை வெளியிட்டன. (உ)

உபவேந்தர் குணரத்தினம் தலைமையில்பிரசைகள்குழு

யாழ்ப்பாணம் நற்சமூக நடுநிலையத்தில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் தலைமையில் பிரசைகள் குழு ஒன்று அமைக்கப்பட்டதாக நேற்று மாலை "உதயன்" அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

சமூகத்தின் சகல தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்

(4ஆம் பக்கம் பார்க்க)

விவரம் வெளியிடுவதற்கு மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ், குடாநாட்டில் கடந்த ஞாயிறன்று காலை தாம் ஆரம்பித்த "முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கை தொடர்ந்து இடம்பெறும் என்று ஸ்ரீலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்கா நேற்றுத் தெரிவித்தார்.

ஆனால் அந்த நடவடிக்கை எங்கு, எப்படி மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தை வெளியிட அவர் மறுத்துவிட்டார்.

இரு அணிகளாகப் பிரிந்து நடவடிக்கையை ஆரம்பித்த படையினர் நேற்று பிற்பகல் 3 15 மணிக்கு [வட்டுக்கோட்டைக்கு அப்பால் ஒன்றிணைந்ததாகவும் அவர் கூறினார்.

படையினரின் ஷெல் விமானத் தாக்குதல்கள் நேற்று நான்காவது நாளாகத் தொடர்ந்து இடம் பெற்றன.

நேற்றுக் காலை முதல் மாலை வரை மூன்று தடவைகள் "புக்காரா" விமானம் மக்கள் குடியிருப்புகள் மீது தாக்குதல் நடத்தியது.

மக்கள் குடியிருப்புகள் மீது ஷெல் தாக்குதல்களும் நேற்

[4 ஆம் பக்கம் பார்க்க]

ஆனையிறவுப் பகுதியில் படையினரின் முன்னேற்ற முயற்சி முறியடிப்பு

ஆனையிறவுப் பகுதியில் ஸ்ரீலங்காப் படையினர் மேற்கொண்ட பெரியதொரு முன்னேற்ற முயற்சியை தாக்குதல் நடத்தி விடுதலைப் புலிகள் முறியடித்ததாக அறிவிக்கப்படுகின்றது.

நேற்றுக் காலை ஆனையிறவின் தென்பகுதியில் உள்ள தட்டுவன் கொட்டிப்பகுதியை நோக்கி நான்கு டாங்கிகள் சகிதம் முன்னேற முயன்ற படையினரையே விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கினர்.

சுமார் மூன்று மணி நேரம் நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து இராணுவம் தனது நிலைக்குப் பின்வாங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலின் போது சிப்பாய் ஒருவர் காலை இழந்தார். மேல் விவரங்கள் தெரியவரவில்லை. [உ-3]

இடம்பெயர்ந்த மக்களுக்கு இதுவரை 63 முகாம்கள் அமைக்கப்பட்டன

தென்மராட்சியிலேயே அதிகம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

வலி - மேற்கு, வலி-வடக்கு பகுதிகளில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த மக்கள் தங்குவதற்கு 63 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்த மக்களுக்கு வசதிகள் ஏற்படுத்துவது தொடர்பாக நேற்றுமாலை நடந்த கூட்டத்தில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

யாழ் நகரில் அமைந்துள்ள 7 முகாம்களில் 726 குடும்பங்களும் —

நல்லூர் பகுதியில் அமைந்துள்ள 18 முகாம்களில் 4 ஆயிரத்து 662 குடும்பங்களும்—

கோப்பாய் பகுதியில் அமைந்துள்ள 8 முகாம்களில் ஆயிரத்து 554 குடும்பங்களும் —

தென்மராட்சிப் பகுதியில் 21 முகாம்களில் ஆயிரத்து 936 குடும்பங்களும் —

வடமராட்சி கிழக்கில் அமைந்துள்ள 4 முகாம்களில் 450 குடும்பங்களும் —

பளைப் பகுதியில் அமைந்துள்ள 3 முகாம்களில் 385 குடும்பங்களும் — தங்கியுள்ளன:

முகாம்களி 8 ஆயிரத்து 878 குடும்பங்களைச் சேர்ந்த 39 ஆயிரத்து 629 பேர் தங்கியுள்ளனர் என கணக்கிடப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை 3 லட்சம் என முன்கொண்டு மதிப்பீடு செய்யப்பட்ட போதும் — பிரதேச செயலர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் படி முகாம்களில் இருக்கும் 40ஆயிரம் பேர் தவிர்ந்த ஏனையோர் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியிருக்கின்றனர் என தெரிவிக்கப்பட்டது. [இ-3]

யாழ். ஆயரின் அறிக்கை பாப்பரசருக்கு

வாஷிங்டன்,ஜூலை 13

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயப் பகுதியில் தஞ்சம் புகுந்திருந்த அகதிகள் மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் பெரும் எண்ணிக்கையான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டது குறித்து யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் அனுப்பியுள்ள அறிக்கை வத்திகானுக்கு — புனித பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் — சின்னப்பருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

யாழ் ஆயர்தமக்கு அனுப்பிய அறிக்கையை கொழும்பு அதிமேற்றிராணியார் வண நிக்கலஸ் மார்கஸ் பெர்னான்டோ, புனித திருத்தந்தைக்கு அனுப்பி வைத்ததாக சர்வதேச செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது. [உ]

படையினர் சூடு பெண் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

நேற்று முன்தினம் வட்டுக்கோட்டைப் பகுதியில் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமுற்ற க. இராசமணி (வயது 50) என்ற பெண் நேற்று யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டார். ([illegible])

53 சிறிய முகாம்கள் கிழக்கில் மூடப்பட்டன

கிழக்கு மாகாணத்தில் புலிகளின் தாக்குதலை சந்திக்க முடியாததால் இராணுவத்தின் 53 சிறிய முகாம்கள் மூடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

120 துருப்புக்களுக்கு குறைந்த அளவு துருப்புக்கள் இருந்த முகாம்களே மூடப்பட்டதாகவும் —

இந்த முகாம்கள் ஆயிரம் துருப்புக்களைக் கொண்டதாக விரைவில் புதிதாக அமைக்கப்படும் என்றும் —

பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-3)

நவாலித் தாக்குதலை உறுதிசெய்து செஞ். குழு ஜெனீவாவில் அறிக்கை

ஜெனிவா, ஜூலை 13

நவாலியில் உள்ள சென். பீற்றர்ஸ் தேவாலயமும், அதனைச் சூழவுள்ள கட்டடங்களும் ஸ்ரீலங்கா விமானப் படையின் தாக்குதலுக்கு இலக்கானதை உறுதிப்படுத்தி ஜெனிவாவில் உள்ள செஞ் [illegible] குழுவின் தலைமையகம் [illegible] டுள்ளது.

அந்த அறிக்கை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவால் நேற்று கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் ஒரே சமயத்தில் வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கடந்த ஜூலை 9ஆம் திகதிக்கு நேரான யாழ்ப்பாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைகள் மீது பெரும் அளவிலான இராணுவ நடவடிக்கை ஒன்றை ஸ்ரீலங்கா ஆயுதப் படைகள் ஆரம்பித்தன.

கடுமையான பீரங்கிக் குழல் தாக்குதல், வான் தாக்குதல்களைக் கொண்ட இந்த நடவடிக்கை உடனடியாக பத்தாயிரக் கணக்குகளில் சிவிலியன்களைப் அப் பிரதேசங்களை விட்டுவெளியேற வைத்தது.

இடம்பெயர்ந்தவர்களில் அதிகமானோர் கோயில்களிலும், தேவாலயங்களிலும் தஞ்சம் புகுந்தனர். அந்த வகையில் நவாலியில் உள்ள சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும் பல நூற்றுக் கணக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

அளவ்வையில் மீட்கப்பட்ட

சடலங்களில் ஒன்று கோண்டாவில் வாசியினது

யாழ்ப்பாணம்,ஜூலை 13

அளவ்வை வாவியில் இருந்து உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்ட பல சடலங்களில் ஒன்று கோண்டாவில் வாசி ஒருவரினுடையது என அடையாளம் காணப்பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கோண்டாவில் மிஷன் பாடசாலை வீதியைச் சேர்ந்த மார்க்கண்டு செல்வராசா [வயது 28] என்பவரின் சடலமே அது என உறவினர்களால் அடையாளம் காணப்பட்டு, பெற்றோருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இளைஞர் கட்டுப்பெத்தையில் கடந்த சில வருடங்களாக சிகை அலங்காரத் தொழிலை மேற்கொண்டு வந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது. [உ-15]

அரசின் தீர்வுத் திட்டம் இன்னும் 2 வாரங்களிலாம்

அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான அரசின் அரசியல் திட்ட யோசனைகள் இன்னும் இருவாரங்களில் வெளியிடப்படும்.

இவ்வாறு நீதி, அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி எல் பீரிஸ் தெரிவித்தார்.

அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றிலேயே அரசுக்கு நம்பிக்கை இருக்கிறது.

மத்திய அரசும், மாகாண சபைகளும் பகிர்ந்து கொள்ளும் அதிகாரம் பற்றித் தீர்மானிப்பது முக்கியமானது.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். [இ 7]

பொருள்களுக்கு தட்டுப்பாடு விலைகளும் அதிகரிப்பு

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலை காரணமாக உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. விலைகளும் அதிகரித்துள்ளன.

மருந்துப் பொருள்கள்,குழந்தைகளுக்கான பால்மா வகைகள், மரக்கறி வகைகள் திடீரென விலை அதிகரித்துள்ளன.

பேக்கரிகளில் போதியளவு பாண் உற்பத்தி செய்யப்படாத காரணத்தால் மக்கள் கியூவில் நின்று பாண் வாங்க வேண்டியுள்ளது.

நகரில் உள்ள பல மருந்து விற்பனை நிலையங்களும், பலசரக்குக் கடைகளும் திறக்காத காரணத்தால் பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் விலைகளும் ஏறியுள்ளன. [இ-3]

உயிரிழப்புகள் குறித்து தமிழ்க் கட்சிகள் கவலை

கொழும்பு, ஜூலை 13

குடாநாட்டில் படையினர் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகளில் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள உயிர்ச் சேதங்கள் குறித்து கொழும்பில் உள்ள தமிழ் கட்சிப் பிரமுகர்கள் சிலர் ஜனாதிபதியிடம் தமது கவலையை வெளியிட்டுள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் — பொதுமக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் குண்டுத் தாக்குதல்களை நடத்துவதைத் தவிர்க்குமாறு கேட்டுள்ளார்.

ஈ. பி. ஆர். எல். எவ் செயலாளர் நாயகம் திரு. சுரேஷ்பிரேமச்சந்திரன் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் —

விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைப்பதற்கென மேற்கொள்ளப்பட்டுள்ள தற்போதைய தாக்குதலில் பொதுமக்கள்கொல்லப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்று கோரியுள்ளார். (ஐ)

இடம்பெயர்ந்த வீடுகளில் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 13

மக்கள் இடம்பெயர்ந்த வீடுகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நவாலியில் சில வீடுகளின் கதவுகள் உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை நேற்று முன்தினம் அராலிப் பகுதியில் இடம்பெயர்ந்தவர்களின் வீடுகளில் உடமைகளைத் திருடிக்கொண்டிருந்தவர்கள் விடுதலைப் புலிகளிடம் அகப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ-4-100]

மேலும் இரு போராளிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூலை. 13

தற்போது வடக்கில் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும் ஸ்ரீலங்கா படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் மேலும் இரு போராளிகள் வீர மரணமடைந்துள்ளனர்.

லெப்டினன்ட் இலங்கேஸ்வரன் (பழனியாண்டி சந்திரமோகன் — கொழும்பு, தற்போது முல்லைத் தீவு) கப்டன் நெடுஞ்செழியன் (துரைசிங்கம் சுபாகரன் — மட்டுவில்) ஆகிய போராளிகளே வீரமரணமடைந்தவர்களாவர். (இ-3)

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்குண்டு

இரும்புச் சகடை 10' நீளம் 10" அகலம் விற்பனைக்குண்டு, "பரஸ்கோ" இல 798, பருத்தித்துறை றோட், நல்லூர். (37434)

தவறிவிட்டது

வைத்திலிங்கம் - தருமலிங்கம் முதலாம் வட்டாரம் புங்குடுதீவு என்ற விலாசமுள்ள 303611410V இலக்க அடையாள அட்டை யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். வை. தருமலிங்கம், 93/12, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். சன்மானம் வழங்கப்படும். [37489]

இலங்கை வங்கி ஊழியருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13 யாழ் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் இரண்டாவது கிளையிலும், சுன்னாகம், மானிப்பாய், காங்கேசன்துறைக் கிளைகளிலும் கடமையாற்றும் முகாமையாளர்கள், அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோரை இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு இலங்கை வங்கி, மாவட்ட காரியாலயத்திற்கு சமூகமளிக்குமாறு மாவட்ட முகாமையாளர் கோரியுள்ளார். (ஐ)

வவுனியாவில் ஆணின் சடலம்

வவுனியா கூமாங்குளம் வீதியில் இனந் தெரியாத ஆணின் சடலம் தலையில் சூட்டுக் காயத்துடன் நேற்று முன்தினம் காணப்பட்டது. சடலம் பின்னர் வவுனியா ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

9 என். எம் சிறு துப்பாக்கியால் இவர் சுடப்பட்டிருக்கலாம் என்று பொலீஸார் தெரிவித்தனர் (ஐ)

இந்து மன்றம் ஜனாதிபதிக்கு கடிதம்

வடக்கு — கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட லட்சக்கணக்கான மக்களை பாதுகாக்குமாறு அகில இலங்கை இந்து மா மன்றம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அவசர கடிதம் ஒன்றில் கோரியுள்ளது.

வடக்கில் சமீபத்தில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையில் ஏராளமான பொது மக்கள் உயிரிழந்துள்ளதாக அறிகிறோம். இராணுவ நடவடிக்கைகளால் மக்கள் துன்பமடையாது இருப்பதை உறுதிப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்குமாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

உ
கலட்டி - எச்சாட்டி
மாரியம்மன்
கோவில்

கும்பாபிஷேகம் சம்பந்தமான முகூர்த்த நிர்ணயம் பற்றிய விளக்கம்

யுவ வருஷம் ஆனி மீ 32ந் திகதி [16-7-95] ஞாயிறு அன்று கும்பாபிஷேகம் நடத்துவதற்காக முகூர்த்தம் எம்மால் உத்தமமானது எனக் கூறப்படவில்லை. மாதாந்தம், அயனாந்தம் இருப்பதால் நல்ல முகூர்த்தம் அல்ல என்றும், மத்திமமானது என்றும் "மாதாந்தே பிம்பநாசனம்" என இருப்பதால் இது நல்ல நாள் அல்ல என்றும் கூறப்பட்டது. எனது அனுமதியின்றி கும்பாபிஷேக பத்திரிகையில் எனது பெயரும் பாவிக்கப்பட்டுள்ளது என்பதனை யாவருக்கும் தெரியப் படுத்துகிறோம். ஆலய நிர்வாகமும், குருமாரும் மேற்படி நாளில் செய்ய வேண்டும் என்று பிடிவாதமாக நிற்பதால் உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள் என்றும் எனது பெயரைப் பாவிக்க வேண்டாம் என்றும், எம்மால் கூறப்பட்டது என்பதையும் அறியத்தருகிறோம்.

கந்த.சாம்பசிவ
சிவாசாரியார்
இந்துமத குரு பீடாதிபதி
[தலைமைக்குரு)
[37517]

முதலாம் ஆண்டு நினைவலைகள்

செல்வி சபிதா கமலநாதன்
[சபிக்குட்டி]

மலர்வு: 02-06-1992
உதிர்வு: 13-07-1994

தத்திநடை பயின்று தக்கமொழி பேசி
தாய் மடியில் தஞ்சமானவளே
நோய்கொண்ட வேளை நோக்கொண்டஎமை
நொடிதனில் வென்றவளே
அப்பாவுக்கு விடைதந்து அம்மாவை விட்டகல
ஆழ்கிணற்றில் ஆண்டவன் அழைத்தானா
ஓராண்டாய் அழுது புலம்புகிறோம்
ஓடி வாராயோ சபிக்குட்டி.

உன்நினைவில் உறங்கும்:
அப்பா, அம்மா,
தங்கை, லக்ஷனா.

துன்னாலை மத்தி,
கரவெட்டி.
[37478]

---

5 ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு: 03 — 01 — 1929
இறப்பு: 08 — 07 — 1990

அமரர்
நாகலிங்கம் தேவபாலசுந்தரம்
(ஓய்வு பெற்ற விளையாட்டதிகாரி)

ஆண்டுகள் ஐந்து நகர்ந்தனவே,
துயரங்கள் எம்மைச் சூழ்ந்தனவே
நினைவுகள் இன்றும் நீங்கவில்லை
நெஞ்சினிலே என்றும் நிறைந்தனவே.

உங்கள் ஆத்ம சாந்திக்குபிரார்த்திக்கும்;
மனைவி, மகன்.

"தேவஸ்தான்"
கைதடி.
(37414)

3-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 06 — 04 — 1930
உதிர்வு: 15 — 07 — 1992

அமரர் தம்பு கோபாலசிங்கம்
[முன்னாள் சாந்தா ரெக்ரைக்ஸ்,
ராஜ்கோபால்ஸ் பங்காளர்]

திதி: 13 - 07 - 1995

ஆண்டு மூன்று ஆனாலும் உங்கள் அன்பு எம்மை விட்டு அகலாது. உங்கள் ஆசியும், அறிவுரைகளும் இன்றும் எம்மை வழிநடத்திக் கொண்டிருக்கின்றன. தங்கள் ஆத்மாசாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர், ஊழியர்கள்.
(37503)

கண்ணீர் அஞ்சலி

வேலுப்பிள்ளை வன்னியசிங்கம்
பிலிப்புப்பிள்ளை கபிரியேல்பிள்ளை
செல்வி ஹேமலதா செல்வராசா
[கிராம உத்தியோகத்தர்கள்]

யா/231 - மாவிட்டபுரம் கிராம உத்தியோகத்தர்
திரு. வே. வன்னியசிங்கம்,
யா/149 சில்லாலை தெற்கு கிராம உத்தியோகத்தர்
திரு. பி. கபிரியேல்பிள்ளை,
யா/134 நவாலி வடக்கு கிராம உத்தியோகத்தர்
செல்வி ஹேமலதா செல்வராசா

ஆகியோர் 1995 — 07 — 09 இல் அகால மரணமடைந்த செய்தியினால் அதிர்ச்சியுற்ற நாம் அவர்களது பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவர்களுடன் துன்பத்தைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

காலஞ் சென்ற கிராம உத்தியோகத்தர்களது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தமிழ் பேசும் கிராம சேவை அலுவலர் சங்கம்
(சி-1640)

3-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 27 — 07 — 1956
ஆண்டவன் அடியில்: 15 — (7 — 1992

திருமதி
சுந்தரலிங்கம் அரியமலர்

திதி: இன்று 13 – 07 – 1995

பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்துத் தாலாட்டி
சீராக நான் வளர்த்த செல்வ மகளே!
ஆரம்பக் கல்வி அளவெட்டி சென். மேரிஸ்
அருணாசலம் வித்தியாசாலையுடன்
அருணோதயாக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி –
–எனப் பயின்று
அடுத்து பட்டப்படிப்பும் இந்தியாவில் முடித்துக் –
கொண்டாய்
வறுமையால் பிரான்சில் உழைக்கச் சென்றாய்
அம்மா!

பெரியோரின் முன் முருகன் சந்நிதியில்
திருமணமாகி வாழ்வில் அமர்ந்தாயம்மா
கொடிய நோய்வாய்ப்பட்டு!
சிவனடி சேர்ந்தாய் அம்மா!
மாறாத அன்பு கொண்டாய் – மனதில்
மாசற்ற பண்பு கொண்டாய் – குற்றம்
கூறாத பரிவு பெற்றாய் – என்றும்
குறைவற்ற கனிவு கொண்டாய் – உன்னை
தேறாத துயரிடையே தேடுகின்றோம் – தெய்வமே!
தேம்பி உள்ளம் வாடுகின்றோம் – எமது
ஆறாத கண்ணீரை அளவெடுத்தால் – அது
மூன்றாண்டு அல்ல நூறாண்டு அம்மா – எமக்கு
உலகில் நீ இல்லை அம்மா
நான் பெற்ற செல்வம், என் பெற்ற வயிறு
கொதிக்குதம்மா
நான் பெற்ற செல்வம், எங்கே மறந்தாய்!
அம்மா!
நான் பெற்ற செல்வம், நான் பெற்ற செல்வம்
என்னுடைய மனக்கோட்டை இடிந்ததம்மா!
உன் நினைவு என் நெஞ்சில் மாறாதம்மா
உன் ஆத்மா சாந்தியடையட்டும் தாயே!

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உன் பிரிவால் வாடும்:
அம்மா, அண்ணா. அண்ணி,
மருமக்கள் தம்பி ரூபன்,
உறவினர்கள்.

"சாந்தவளவு"
அளவெட்டி தெற்கு.
அளவெட்டி.
[37444]

1-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 07 — 09 — 1944
உதிர்வு: 25 — 06 — 1994

அமரர் சுப்பையா சின்னராசா

"பிறப்பினில் உன்னோடு இருப்பவர்
மரணத்திலும் உன்னோடு இருப்பர்"

இழப்பால் துயருறும்;
மனைவி, மக்கள்,
உடன் பிறப்புக்கள்.

ஆவரங்கால் மேற்கு,
ஆவரங்கால்.
(37466)

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 31 — 12 — 1938
மறைவு: 25 — 06 — 1994

அமரர்
பொன்னையா தயாநேசன்

அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய்,
பாசத்தின் சிகரமாய் வாழ்ந்து காட்டிய எம்
இதய தெய்வமே அப்பா!
கொடிய நோய் உங்களைக் கவர்ந்த தேனோ
எங்கள் கனவுகளே கண்ணீரால் கரைகிறது
அன்பால் அரவணைத்து கண்ணாகக் காத்தீர்களே
உங்கள் பிரிவுத்துயிலில் ஆறாத எம் மனதில்
வேகாக ஓராண்டு ஓடி மறைந்தது
நம்ப முடிய வில்லையே அப்பா
ஏழேழு ஜென்மங்கள் எடுத்தாலும்
நீங்கள் தான் எங்கள் அப்பா
உருவங்கள் ஓடி மறைந்தாலும் எங்கள்
உள்ளத்தில் உங்கள் ஒளி வீசும் அப்பா

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
அன்பு மனைவி, பிள்ளைகள்.

14 A மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
[37465]

---

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் நமசிவாயம் வீரசிங்கம்

தோற்றம்: 12 – 02 – 1906
மறைவு: 13 – 06 – 1995

திதி: 13 - 07 - 1995

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வாழ்வில் எம்மையெல்லாம் உயர்த்தி விட்டு எம்மைப் பிரிந்து இறைவனடி சேர்ந்துவிட்ட எங்கள் குல தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வகையில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்:

அன்பு மனைவி: தங்கம்மா,

பிள்ளைகள்: அமரர் யோகநாதன்
மற்றும்
ரதிதேவி, ரதிகுமாரி,
நவபாலன் [கனடா],
ஸ்ரீகாந்தன் [ஸ்ரீசிவா
நகை மாடம், கனடா],

மருமக்கள்: தவராஜா, சண்முகநாதன்,
கமலா, தேவி (குவைத்),
சற்குணேஸ்வரி (கனடா),
சாந்தா [கனடா)

பேரப்பிள்ளைகள்: பிரதீபன், நேருஜா,
அனித்தா, ஜெனித்தா,
சிந்துஜன் (கனடா),
நிறோஜன் (கனடா),
சாருஜன் [கனடா],
நேமிஜா (கனடா],
டக்ஷன் [கனடா],
டிக்ஷன் (கனடா).

தகவல்:
சண்முகநாதன்
(மருமகன்)
(37507)

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

கொலைஞனே நீதிபதியா?

நவாலி சென் பீற்றேர்ஸ் தேவாலயம் மீது நடத்தப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா படையினருக்கு உத்தரவிட்டிருக்கின்றார்.

தேவாலயத்தில் இருந்த மக்கள் குண்டுவீச்சில் உயிரிழந்தது குறித்து சந்திரிகா கொழும்பு அதிமேற்றிராணியாருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு கவலை தெரிவித்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சந்திரிகா கவலை தெரிவித்துவிட்டதால், அவரது படை மிக கோரத்தனமாக இரண்டு விநாடிகளில் பலிகொண்ட 65க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் உயிர்பெற்று வந்துவிடுவார்களா?

ஜனாதிபதியின் கவலை தமிழர்களுக்கு எந்த வகையிலும் அவர் மீதுள்ள வெறுப்பை குறைப்பதற்கு உதவமாட்டாது. கொலை செய்தவன் அதற்காக மன்னிப்புக் கேட்டால் மனிதாபிமான ரீதியில் தண்டனை இன்றி அவனை மன்னித்துவிடலாம். பயங்கரகுற்றத்தையும் செய்துவிட்டு அதற்கு கவலை தெரிவிப்பது தனது குற்றத்தை ஒப்புக் கொள்ளாமல் அதனை மறைக்கச் செய்து அந்தக் குற்றத்துக்கான பொறுப்பில் இருந்து நழுவிக் கொள்வதாகும்.

சந்திரிகாவின் இந்தச் சம்பிரதாயக் கவலை தெரிவிப்பு, நவாலியில் நடத்தப்பட்ட அரச பயங்கரவாதத்தினால் வெளிநாடுகளில் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைத் தடுப்பதற்காகும்.

ஸ்ரீலங்காப் படைகளின் அரச பயங்கரவாதம் உலகப் பிரசித்தமானது. போர்க்களத்தில் தமது தரப்பில் உண்டாகும் இழப்புக்களுக்குப் பழிவாங்கும் விதத்தில் அப்பாவித் தமிழ் மக்களைக் கொல்வதிலும் அரச படைகள் பெயர்பெற்றவை.

அந்த வரிசையில், விமானப்படை விமானங்கள் இரண்டின் மீதும் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களின் போது மாண்ட படையினரின் இழப்புக்கு பழிவாங்கும் தாக்குதலாகவே, பொதுமக்கள் மீது இலக்கு வைத்து நவாலியில் அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. அதனைக் கண்டறிவதற்கு ஒரு விசாரணையும் தேவையா? அதனை மறைப்பதே உத்தேச விசாரணையின் முழு நோக்கமும் ஆகும்.

மிகத் தீவிரமாக நடந்த எறிகணை, குண்டு வீச்சுக்களில் அகப்படாமல் உயிரைப் பாதுகாக்கும் நோக்குடன் தமது இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்த மக்கள் தங்கி நின்ற தேவாலயத்தின் மீது, இலக்கு வைத்துக் குண்டு வீச்சு நடத்தப்பட்டது. அச் சம்பவத்தில் காயமுற்ற மக்கள் இந்தப் பயங்கரத்தினை அனுபவித்த சாட்சிகளாவர்.

சம்பவம் நடைபெற்ற பின்னர் அங்கு விஜயம் செய்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி, விமானக் குண்டு வீச்சினை சந்தேகத்துக்கு இடமின்றி ஊர்ஜிதம் செய்திருக்கிறார்.

இதனையும் நம்பாமல் விசாரணை நடத்த வேண்டும் என்று சந்திரிகா விரும்பினால், சுயேச்சை உறுப்பினர்களைக் கொண்ட விசாரணைக் குழுவை நியமித்து அதனை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி சம்பவத்தில் காயமுற்றவர்களிடம் சாட்சியங்களைப் பதிவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்போது தான் உண்மையை வெளிக்கொணர முடியும்.

அதனை விடுத்து உலக நாடுகளை ஏமாற்றும் நோக்குடன், அரச பயங்கரவாதத்தை— பழிவாங்கலை— தமிழர்களை இனப்படுகொலை புரிவதை— மறைத்துவிடும் எண்ணத்துடனேயே படையினரைக் கொண்டே விசாரணை நடத்த சந்திரிகா முற்படுகிறார்.

கொலைகாரனையே நீதிபதியாக நியமித்து விசாரணை நடத்தும் இந்தவிசித்திரத்தை உலக நாடுகள்நன்றாக உணர வேண்டும் சந்திரிகா சமாதானத்தின்மறு வடிவம் என்று தாம் கொண்டிருக்கும் கருத்தை உடனடியாக மாற்ற வேண்டும். அவரின் போலித் தனத்தையும், பொய், புரட்டுக்களையும் இனியாவது குறித்துக்கொள்ள வேண்டும்.

தொடர்ந்து இடம்பெயரும் மக்களால்
தென்மராட்சி எங்கும் சனத்திரள்!

அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு

தென்மராட்சி, ஜூலை 13

வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்குப் பகுதிகளில் பெருந்த எடுப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் தென்மராட்சிப் பகுதியை நோக்கித் தொடர்ந்து இடம்பெயர்ந்து வருகின்றனர்.

நாவற்குழி—கண்டிவீதி வழியாக நூற்றுக்கணக்கில் மக்கள் கால்நடையாகவும், சைக்கிள்கள், மாட்டுவண்டிகள் லான்ட்மாஸ்ரர்கள் என்பனவற்றிலும் தென்மராட்சி பகுதியை நோக்கிச் சென்றுகொண்டிருந்ததை நேற்றும் காணமுடிந்தது.

யாழ். நகரை அண்டிய பகுதிகளில் இருந்தும் சிலர் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெயரத் தொடங்கியுள்ளனர்.

சாவகச்சேரி உட்பட தென்மராட்சியின் பல பகுதிகள் சனத்திரளாகக் காட்சி அளிக்கிறது.

பாடசாலைகள், கோயில்கள், பொது இடங்கள் வீதி ஓரங்கள்எங்கும் கூட்டம் கூட்டமாக மக்கள் தங்கியுள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள இடங்களில் சுகாதாரப் பராமரிப்பும் பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

இடம் பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் தங்கியுள்ள மக்களின் நலன்களைக் கவனிக்க தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினருடன் தொண்டர் நிறுவனங்களும் இணைந்து துரிதகதியில் செயல்பட்டு வருகின்றன.

ஆலயங்களிலும் தங்கியுள்ள மக்களுக்கு தென்மராட்சிப் பகுதியில் உள்ள மக்கள் சமைத்த உணவுகளை வழங்கி வருகின்றனர்.

நாவற்குழியில் உள்ள குடியேற்றத் திட்டங்கள் கைதடி தேவகி குடியிருப்பு கெற்பலி பண்டிதர் குடியிருப்பு, ஆகிய பகுதிகள் இடம் பெயர்ந்த மக்களால் நிரம்பி வழிகின்றன.

தென்மராட்சிப் பகுதியில் உள்ள பெரும்பாலான வீடுகளில் இடம்பெயர்ந்தமக்கள் தஞ்சமடைந்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

இடம் பெயர்ந்து வரும் மக்களுக்கு தென்மராட்சிப் பகுதியில் உள்ள பாடசாலைகளினதும், தனியார் கல்வி நிறுவனங்களினதும் மாணவர்கள் வீதிகளில் தேநீர், கஞ்சி, பிஸ்கட் போன்றவற்றை வழங்கி வருகின்றனர்.

தொடர்ச்சியாக இடம் பெற்றுவரும் தாக்குதல்களினால் தனியார் போக்குவரத்துச் சேவை நிறுத்தப்பட்டுள்ளதால் இடம் பெயர்ந்து வரும் மக்கள் பெரும்பாலும் கால்நடையாகவே வருகின்றனர்.

தனியார் பஸ்சேவை நிறுத்தப்பட்டுள்ள போதிலும் தனியார் பஸ்கள் சில கூடுதல் கட்டணம் அறவிட்டு சேவை நடத்தி வருகின்றன.

இலட்சக் கணக்கான மக்கள் தங்கியுள்ளதால் வர்த்தக நிலையங்களில் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

(ஜ-117)

அளவெட்டி இளைஞர் படையினர் சூட்டுக்கு பலி!

யாழ்ப்பாணம் ஜூலை 13

அளவெட்டிப் பகுதியில் வெதுப்பகம் ஒன்றில் பணிபுரியும் இளைஞர் ஒருவர் படையினரின் சூட்டுக்கு இலக்காகிப் பலியானதாகத் தெரியவருகிறது.

தவம் என்று அழைக்கப்படும் இவர் இராணுவத்தினரைக் கண்டு ஓட முற்பட்ட போது சுடப்பட்டார் என்றும்— அவரது உடலைப் படையினர் கொண்டு சென்றதைத் தான் கண்டதாகவும் படையினரின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்ட வயோதிபர் ஒருவர் தெரிவித்தார். (ஜ-13)

தங்கியுள்ள இடங்களில் நிவாரணம் பெற ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 13

ஏற்கனவே இடம்பெயர்ந்து தற்போதைய இராணுவ நடவடிக்கையால் மீள இடம் பெயர்ந்தவர்களுக்கு அவர்கள் தற்போது இடம் பெயர்ந்திருக்கும் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் நிவாரணப் பொருள்களைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தில் திட்டப்பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற இடம் பெயர்ந்தவர்களின் தற்போதைய நிலை தொடர்பான கூட்டமொன்றில் இவ்வாறு அறிவிக்கப்பட்டது.

இடம் பெயர்ந்திருப்பவர்கள் தற்போது இருக்கும் பகுதி கிராம சேவையாளருடாக பிரதேச செயலரின் சிபார்சுடன் நிவாரணப் பொருள்களை அந்தப் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது

இதேவேளை இடம் பெயர்ந்துள்ள அனைவருக்கும் கட்டுப்பாட்டு விலையில் அத்தியாவசிய உணவுப் பொருள்களை பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் மீது படையினர் துப்பாக்கிச் சூடு

இளம் பெண் காயம்

வடலியடைப்பு பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து சென்றுகொண்டிருந்தவர்களை நோக்கி இராணுவம் குறி பார்த்துச் சுட்டதில் இளம் பெண் ஒருவர் முதுகில் காயமடைந்தார்.

சங்கரத்தைப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கந்தசாமி சாந்தி (வயது 18) என்ற பெண்ணே காயமடைந்தவராவார்.

காலை 11 மணிக்கு இடம் பெற்ற இச்சம்பவத்தில் காயமடைந்த பெண் அன்று இரவு 9 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இராணுவத்தினரின் கெடுபிடிக்கு அஞ்சி சூடுவிழுந்த இடத்தில் படுத்திருந்த இவர்கள் இருள் பரவிய பின்பே தவழ்ந்து, தவழ்ந்து புறப்பட்டு அவ்விடத்தை விட்டு வெளியேறினர். (ஜ-15)

அமெரிக்க விமானப்படை அதிகாரிகள் வருகை

கொழும்பு, ஜூலை 13

ஸ்ரீலங்கா அரசின் வேண்டுகோளுக்கு இணங்க அமெரிக்க விமானப்படையைச் சேர்ந்த இரு அதிகாரிகள் அண்மையில் இலங்கை வந்திருந்தனர் என 'ரஸ்மிய' சிங்கள வார இதழ் தெரிவிக்கிறது.

ஸ்ரீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான வான் கலங்கள் மீது விடுதலைப்புலிகள் மேற்கொள்ளும் ஏவுகணைத் தாக்குதல் தொடர்பாக விமானப்படையினருக்கு ஆலோசனை வழங்கவே அமெரிக்க அதிகாரிகள் வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

வீட்டு மதிலின் மேல் இளைஞனின் தலை!

சித்தாண்டியில் சம்பவம்

கொழும்பு, ஜூலை 13

சித்தாண்டி முருகன் கோவிலுக்கு முன்பாக உள்ள வீட்டு மதிலில் கடந்த ஞாயிறு காலை இளைஞர் ஒருவரின் துண்டிக்கப்பட்ட தலை வைக்கப்பட்டிருந்தது.

தலைக்குரிய இளைஞர் சித்தாண்டியைச் சேர்ந்த பாலன் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த இளைஞனின் உடல் என்னவாயிற்று என்றோ இக் கொலையை யார் செய்தது என்பதோ தெரியவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் இப் பகுதியில் பெரும் பதற்றத்தை உருவாக்கியுள்ளது. [ஐ]

குடும்பத்துக்கு 3 கிலோ சீனி

கூட்டுறவுக் கடைகளில் ஒரு குடும்பத்துக்கு 3 கிலோ சீனியும், ஒரு லக்ஸ்பிறேயும் வழங்கப்பட்டு வருகின்றன.

தேவையான பொருள்கள் புனர்வாழ்வுப் பிரிவால் ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. [இ-3]

கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலய அதிபரும் எழுத்தாளருமான திரு. நா.க.தங்கரத்தினம் (நகுலன்) சேவையிலிருந்து இளைப்பாறியமையை முன்னிட்டு மேற்படி வித்தியாலய ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் சேவை நலம் பாராட்டு விழா ஒன்று அண்மையில் நடத்தப்பெற்றது.

ஆசிரியர் ந. சிவசண்முகமூர்த்தி உட்பட மாணவர்கள் பலர் அதிபர் தங்கரத்தினம் செய்த சேவைகள் பற்றி பாராட்டி மாலைகள் சூட்டி தங்கச் சங்கிலி ஒன்றும் அணிந்து கௌரவித்தனர். (ஒ)

பரீட்சைகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

கொழும்பில் நடைபெறவிருந்த சில பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் யாழ்ப்பாணத்துக்கு அறிவித்துள்ளார்.

கலைமாணி வெளிவாரி இறுதியாண்டுப் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறும். பரீட்சைத்திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

கணக்காய்வு அத்தியட்சகர் பதவிக்கான போட்டிப் பரீட்சை (திறந்த/மட்டுப் படுத்தப்பட்ட) காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

இலங்கை நிர்வாகசேவை திறந்தபோட்டிப் பரீட்சை ஆகஸ்ட்மாதத்துக்கு பிற்போடப்பட்டுள்ளது.

[ஒ-4]

குழாய்க்கிணறுகள்

சண்டிலிப்பாய் ஜூலை 13

மாகியப்பிட்டி மறுமலர்ச்சி சனசமூக நிலையம், நவாலி வடக்கு சனசமூக நிலையம் ஆகியவற்றில் சுமார் 40 ஆயிரம் ரூபா செலவில் இரு குழாய்க் கிணறுகள் வலி தென் மேற்கு பிரதேச சபையின் தலைமை செயலகத்தினால் நிறுவப்பட்டுள்ளது.

இதேவேளை கட்டுடை மகாஜன சனசமூக நிலையத்திலும் மற்றுமொரு குழாய்க் கிணறு நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக வலி தென்மேற்கு பிரதேச சபை தலைமைச் செயலகம் தெரிவித்துள்ளது. (க-153)

தேடுபவர்			தேடப்படுபவர்	
பெயர்	முன்னைய விலாசம்	தற்போதைய விலாசம்	பெயர்	விலாசம்
★ வேலாயுதர் இரத்தினசபாபதி —	தொட்டிலடி, சங்கானை.	கைதடி நவீல்ட் பாடசாலை.	சகோதரி இராமலிங்கம் இராசம்மாவும் 3 பிள்ளைகளும்	சுழிபுரம் மத்தி
★ செல்லையா ஆனந்தகிருஷ்ணன் —	மூளாய் தெற்கு	எஸ் சண்முகராஜா, சரா வீதி, கல்வியங்காடு விளையாட்டரங்கு.	மகன் ரகுநாதன் (ரகு)	மூளாய்
★ மு. தங்கராசா —	குளமங்கால், அளவெட்டி.	15/10, செபஸ்ரியன் வீதி, ஒட்டுமடம்.	மகன் சுரேஷ்குமார் குடும்பத்தினர்.	மல்லாகம், அளவெட்டி
★ தனநாயகம் செல்வலக்ஷ்மி —	ஸ்ரேஷன் வீதி, சுன்னாகம்.	மே/பா. சண்முகலிங்கம் கைதடி மேற்கு.	மைத்துனர் வைரவப்பிள்ளை நடராசா குடும்பத்தினர்	சுழிபுரம்
★ நல்லதம்பி பரந்தாமன் —		பொன்.சிவகுமாரன் வீதி, உரும்பராய் கிழக்கு.	மருமகன் கனகரத்தினம் நித்தியானந்தன்	உரும்பராய் கிழக்கு
★ ம. பாலகுமார் —		தில்லைகட்டி ஒழுங்கை, சுன்னாகம்.	சகோதரி எம். சரோஜினி	வல்லை வீதி சங்கானை
★ ஐயாத்துரை தேவதாசன் —	சண்டிலிப்பாய் மேற்கு	மே/பா. புலவர், பொஸ்கோ வீதி, உரும்பராய்.	தகப்பன் முத்துக்குமாரு ஐயாத்துரை	சண்டிலிப்பாய்
★ கா.ரகுநாதன்/திருமதி சுந்தரலிங்கம் —		54, சிவரஞ்சனி வீதி, நாயன்மார்கட்டு.	மருமகன் பொன்னம்பலம் சுந்தரலிங்கம்	''பலோன்'' களஞ்சிய ஊழியர்
★ சோ.சிவஞானசுந்தரம் —	பொன்னாலை மேற்கு	92 'ஏ' ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம்.	மைத்துனர் வைரமுத்து உருத்திரன் குடும்பத்தவர்	வழக்கம்பரை
★ கந்தையா சிவஞானம்—	அராலி தெற்கு	113, பருத்தித்துறை வீதி, நல்லூர்.	தகப்பன் விநாசித்தம்பி கந்தையா	சங்கரத்தை
★ அரியமலர் சற்குணசிங்கம் —	தொல்புரம்	மே/பா. கோபாலசாமி, இளைப்பாறிய தபால்அதிபர் ''புஷ்ப வாசா'', பழம் வீதி, கோப்பாய்.	சகோதரி தவராஜேஸ்வரி	சுழிபுரம் மத்தி
★ வேலாயுதம் பராமரன் —	மூளாய்	314, நாவலர் வீதி, யாழ்	கார்த்திகேசு பார்த்திபன், மகாலட்சுமிப்பிள்ளை	மூளாய்
★ தி. திருநாவுக்கரசு —	—	16, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.	ப. சீதாலட்சுமி ப. சுகந்தி	செட்டிகுறிச்சி பண்டத்தரிப்பு
★ செந்தில்வடிவேல் பரமேஸ்வரி —	ஆழங்குவல சண்டிலிப்பாய்	மயில்வாகனம் மே/பா பால சுப்பிரமணியம் (தபால் கந்தோருக்கு முன்] சென்றல் நேசிங் ஹோம்.	கமலாம்பிகை — சத்தியசீலன் நகுலாம்பிகை — பரமேஸ்வரன்	சண்டிலிப்பாய்
★ பொ. கிருஷ்ணமூர்த்தி—	பிளாக் வீதி, சங்கானை	யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கம், மணிக்கூட்டு வீதி.	தாய் பொன்னையா அன்னம்மா	சங்கானை
★ எஸ். சிவயோகராசா—	—	245, நாவலர் வீதி, யாழ்.	(மருமகன் சின்னத்தம்பி ஆறுப்பிள்ளை	சண்டிலிப்பாய்
★ மனோன்மணி கதிரவேற்பிள்ளை —	—	மே/பா க. நடராசா 60, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.	வீ. கதிரவேற்பிள்ளையும் மனைவியும், 2 பிள்ளைகளும் தாய், தகப்பன், சகோதரிகள்)	''ராணி வாசா'' சுழிபுரம்
★ ஆ. செல்லத்துரை —		தோப்பு, அச்சுவேலி.	மாமன் விஜயரத்தினம், சத்தியபாமா குடும்பம்	ஜெயசக்தி மருந்தகம் மருதனார்மடம்
★ சிங்கநாயகம் செல்வநாயகம் —	சங்கரத்தை, துணைவி	நாவலர் மண்டபம் நீராவியடி, யாழ்.	மைத்துனர் விஜயகுமார், பத்திநாதர் மற்றும் சி. சந்திரன்.	துணைவி
★ எஸ். எவ். இராஜதுரை —	சண்டிலிப்பாய் மத்தி.	3, புது வீதி, கொய்யாத் தோட்டம், யாழ்.	மனைவி புஷ்பராணி மகள்மார் மனோகரி, சுதாமதி	சண்டிலிப்பாய்
★ இந்திரன் —	சித்தன்கேணி	1, சீனியர் ஒழுங்கை வண்ணார்பண்ணை.	சட்டத்தரணி ஆர். கனகநாயகத்தின் மருமகளாகிய கணேசனின் மனைவி கௌரி (பொன் அக்கா)	குளத்தடி சங்கரத்தை
★ கனகரத்தினம் —	காளி கோவிலடி, சண்டிலிப்பாய்	மே/பா. இ. செல்வராசா பிரம்படி, கொக்குவில்.	சகோதரன் கணபதிப்பிள்ளை குடும்பம்.	சண்டிலிப்பாய்
★ சிவஞான சுந்தரலிங்கம் (உதயன்)—		சட்டநாதர் கோவில் வீதி, நல்லூர்.	திருமதி சிவப்பிரகாசம், சி. தயாபரன், சி. நந்தினி, கு. குணேந்திரன், கு. பவானி.	தொல்புரம்
★ ப. தமிழினி —	வேம்படி மகளிர் கல்லூரி	கே. செல்வராசா 216, நாவலர் வீதி, யாழ்.	திருமதி பராபரசிங்கம் பொற்கொடியும் ஐந்து பிள்ளைகளும்	சித்தன்கேணிச் சந்தி

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின்

அறிவித்தல்

01. யாழ். மாவட்ட ப. நோ. கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்/பொது முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் 14-07-95 காலை 10 மணிக்கு சபை மண்டபத்தில் நடைபெறும். எனவே அதற்கு ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர் பொது முகாமையாளர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

02. தலைவர் பொது முகாமையாளர் கலந்துரையாடலைத் தொடர்ந்து யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் விசேட பணிப்பாளர் சபைக் கூட்டம் நடைபெறும். எனவே யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் பணிப்பாளர்கள் கூட்டத்திற்கு தவறாது பங்கு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

சு. சிவசுப்பிரமணியம்,
மாவட்டச் செயலாளர்.

[சி-1643]

மரண அறிவித்தல்கள்

தம்பாப்பிள்ளை மாதுங்கர்

புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாக கொண்டவரும், வண்ணார் பண்ணை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாக கொண்ட வருமான தம்பாப்பிள்ளை மாதுங்கர் (12-07-95) புதன்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லமுத்துவின் அன்பு கணவரும், காலஞ்சென்ற அமிர்தலிங்கம், மனோன்மணி, மோகனாம்பாள், பேரின்பநாதி, காலஞ்சென்ற மோகேஸ்வரன், முருகேஸ்வரன், காலஞ்சென்ற அன்னலிங்கம், பத்மாவதி, ஆகியோரின் அன்புத் தந்தையும், இலட்சுமி, காலஞ்சென்ற இராசையா, காலஞ்சென்ற சின்னத்துரை, பரராஜசிங்கம், செல்வராணி, பரஞ்சோதி, ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 13-07-95 வியாழன் காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
முருகேஸ்வரன்
[மகன்]

34. B.A தம்பிலேன்,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம். [37506]

பொன்னுச்சாமி இராசம்மா

உடுப்பிட்டி வீரபத்திர கோயில் தெற்கில் வசித்தவரும், காலஞ் சென்ற வேலுப்பிள்ளை பொன்னுச்சாமியின் மனைவியுமான இராசம்மா 11 ஆம் திகதி காலை மரணமடைந்து விட்டார். அவரின் இறுதிக் கிரியைகள் அன்று மாலை குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவர் மகேந்திரராசா (கனடா), விவேகானந்தராசா, பரராசசிங்கம் (கனடா), சோதீஸ்வரன் வசந்தராணி, சிவனேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்லம்மா தியாகராசா (ஓய்வு பெற்ற அதிபர் ஆஸ்திரேலியா), நாகலிங்கம் (ஓய்வு பெற்ற அதிபர்), சின்னத்தம்பி (கனடா), காலஞ் சென்ற கந்தசாமி, காலஞ் சென்ற தம்பித்துரை (முன்னைநாள் Y.M.C.A. செயலாளர்) ஆகியோரின் சகோதரியும், அம்பிகா (கனடா), சிவகுமாரி, சந்திரவதனா (கனடா], ஆகியோரின் மாமியாரும், ஆதுரன் தயதுரன், சிவதரன் கிசோக், மிதுலன் ஆகியோரின் அப்பம்மாவும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வசந்தராணி
(மகள்)

வீரபத்திர கோயில் தெற்கு,
உடுப்பிட்டி. (37503)

வேலுப்பிள்ளை வன்னியசிங்கம்

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தொட்டிலடி சங்கானையில் வசித்தவருமான வேலுப்பிள்ளை வன்னியசிங்கம் (கிராமசேவையாளர், மாவிட்டபுரம்) 09-07-95 இல் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அருமை மகனும், மயில்வாகனம் - மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அருமை மருமகனும் (தலைமை ஆசிரியர், மூளாய், J. P.], சிவபாக்கியலட்சுமிதேவியின் அன்புக் கணவரும், பிரணவனின் அருமைத் தந்தையுமாவார்.

இறுதிக்கிரியை 10-07-95 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து இத் தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
வே. துரைசிங்கம்

மயிலணி,
சுன்னாகம். (37504)

திருமதி சின்னத்தங்கம் சின்னத்துரை

(ஓய்வுபெற்ற ஆசிரியை அ. மி. த. க. பாடசாலை நவற்கிரி)

தோப்பு அச்சுவேலியைச் சேர்ந்த திருமதி சின்னத்தங்கம் சின்னத்துரை நேற்றுக் காலை காலமானார்.

இவர் அமரர் க. சின்னத்துரை ஆசிரியரின் அன்பு மனைவியும், ருபறஞ்சன் (கனடா), தேவரஞ்சன் [கனடா], றஜனி, றதினி [ஆசிரியை - அச்சுவேலி மகா வித்தியாலயம்), ஜெயறஞ்சன் [கனடா] ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெராணி, வசீகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [13-7-95] பருத்தித்துறையில் உள்ள அன்னாரின் மருமகனின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
வசீகரன்
(மருமகன்)

(37514)

வணிகர் கழகங்களுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை. 13

தற்போதைய இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து வந்துள்ள மக்களுக்கு உடனடியாக, தங்குமிடம், உணவு, மற்றும் அத்தியாவசிய வசதிகளை ஏற்படுத்தி கொடுக்குமாறும். அவர்களைக் கண்ணியமாகப் பராமரிக்குமாறும் யாழ். மாவட்ட வணிகர் கழகங்களின் இணையம், யாழ். மாவட்டத்தில் உள்ள சகல வணிகர் கழகங்களையும், வணிக மன்றங்களையும் கேட்டுக் கொள்கிறது. (எ)

யாழ். பிரதேச செயலக ஊழியருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 13

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான உலர் உணவு விநியோகம் சம்பந்தமான வேலைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு யாழ். பிரதேச செயலர் பணிமனை ஊழியர்களை கடமைக்கு உடன் சமூகமளிக்கும்படி பிரதேச செயலர் கோரியுள்ளார். [எ]

மத்திய கல்லூரி லியோ அங்கத்தினருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ். மத்திய கல்லூரி லியோக் கழக உறுப்பினர்களை, யாழ், செங்குந்தா இந்துக் கல்லூரி, யாழ். சாதனா பாடசாலை ஆகியவற்றில் கடமையாற்ற வருமாறு, பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (எ)

சமுகமளிக்கவும்

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ். மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசத்தின் வெளிக்கள மற்றும் பணிமனை உத்தியோகத்தர்களை இன்று காலை 8-30 மணிக்கு சமாச அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு சமாச பதில் மாவட்ட செயலாளர் அறிவித்துள்ளார். (இ-எ)

பங்கீட்டு பொருள்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 13

நல்லூர் ப.நோ.கூ. சங்கத்தின் கிளை இல. 10, 11, 14 ஆகியவை தற்காலிகமாக பூட்டப்பட்டுள்ளதால் — தமது பங்கீட்டுப் பொருள்களை இதுவரை பெறத் தவறியோர், திருநெல்வேலியில் அமைந்துள்ள சங்கக் காரியாலயத்தில் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என சங்கப் பொது முகாமையாளர் அறிவிக்கின்றார். [இ-எ]

உபவேந்தர்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தல் கூடியதாக இக்குழு தெரிவு செய்யப்பட்டதாகவும்—

தற்போதைய இராணுவ நடவடிக்கைகளினால் ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்து மதிப்பீடு செய்துவரும் இக்குழு, அதுகுறித்து சர்வதேச சமூகத்துக்கு என அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும் என்றும்—

மேலும் தெரிவிக்கப்பட்டது.

இக்குழுவின் செயலாளராக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு ஆர். மகேந்திரன் செயற்படுவார்.

யாழ்ப்பாணம் நான்காம் குறுக்குத் தெருவில் உள்ள நற்சமூக நடுநிலையத்தில் பிரசைகள் குழு செயற்படும் எனத் தெரிவிக்கப்பட்டது [உ]

பணம் அல்லது பொருளாக உதவுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை. 13

யாழ்ப்பாணத்தில் இடம் பெயர்ந்து துன்பப்படும் மக்களுக்கு உதவி செய்ய விரும்புபவர்கள் பணமாகவோ அல்லது பொருள்களாகவோ வழங்கலாம் என்றும் — அவற்றை கந்தர்மடம் அரசடி வீதியில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டச் செயலகத்தில் ஒப்படைக்கலாம் என்றும் — தமிழீழ புனர்வாழ்வுப்பிரிவு பொறுப்பாளர் அறிவித்துள்ளார். [இ]

அதிபர்கள் - ஆசிரியர்கள் சந்திப்பு இன்றும் நாளையும்

இன்றைய நெருக்கடியில் அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலை மாணவர் தலைவர்கள், கோட்டங்களின் அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய அவசர நடவடிக்கைகள் சம்பந்தமான கூட்டங்கள் கல்விக் கோட்டங்கள் ரீதியாக இன்றும், நாளையும் நடைபெறவிருக்கின்றன.

யாழ், நல்லூர், வேலணை, ஊர்காவற்றுறை கோட்டங்களுக்கு காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியிலும்—

உடுவில், கோப்பாய் கோட்டங்களுக்கு முற்பகல் 11 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும்—

கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி கோட்டங்களுக்கு பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி ம.ம. வித்தியாலயத்திலும்—

சாவகச்சேரி கோட்டத்துக்கு பி. ப. 4 மணிக்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரியிலும் — கூட்டம் நடைபெறும்.

பளைக் கல்விக் கோட்டத்துக்கு நாளை முற்பகல் 10 மணிக்கு பளை ம. ம. வித்தியாலயத்திலும்—

சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழைக் கோட்டங்களுக்கு நாளை யாழ் இந்துக் கல்லூரியிலும்— கூட்டம் நடைபெறும். (இ-3)

நவாலி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கானோர் தஞ்சம் புகுந்தனர்.

நேரடியாகப் பார்த்தவர் கூறிய தகவல்களின்படி —

அன்றையதினம் மாலை 4-30மணிக்கு இந்தத் தேவாலயமும் சூழவுள்ள கட்டடங்களும் விமானப் படையின் தாக்குதல்களுக்கு இலக்காகின.

இந்தத் தாக்குதல்களில் பெண்கள், குழந்தைகள் உட்பட 65 பேர் கொல்லப்பட்டதுடன் 150 பேர் காயமுற்றனர்.

அன்று மாலையும், இரவும் ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்க பணியாளர்கள், காயமுற்றவர்களில் பெரும்பாலானோரை அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர்.

தாக்குதல் நடந்த இடத்துக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் அடுத்த நாள் காலையில் நேரடியாகச் சென்று பெருமளவில் ஏற்பட்டுள்ள சேதங்களைக் குறித்துக் கொண்டதுடன், அவலத்தையும் மதிப்பீடு செய்தனர். பெரும்பாலான சடலங்கள் இடிபாடுகளுக்கு இடையில் இருந்து இன்னும் மீட்கப்படவில்லை.

தொடர்ச்சியான வன்செயல்கள் காரணமாக அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழப்பது குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு, மனித உயிர்கள், உடைமைகள், மக்கள் தஞ்சம் புகுந்த இடங்கள் ஆகியவற்றுக்கு உரிய மரியாதை கொடுக்கும்படி சம்பந்தப்பட்ட தரப்புகளைக் கோருகின்றது.

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரியைச் சூழவுள்ள பாதுகாப்பு வலயத்தை மதிக்கும் படியும், மற்றைய மருத்துவ சேவைகளைத் தாக்குவதைத் தவிர்க்கும்படியும் அவர்களை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு மேலும் கோருகின்றது — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-உ]

மற்றும் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை. 13

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலின் போது கிளிநொச்சிப்பகுதியில் காயமடைந்தவர்களில் ஒருவர் நேற்று முன்தினம் யாழ் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

கிளிநொச்சி பரவிப்பாய்ஞ்சான் பகுதியில் காயமடைந்த ஸ்கந்தபுரம் கோணாவிலைச் சேர்ந்த பிரான்சிஸ் இன்ஸ்லி (வயது 28) என்பவரே மரணமானவர் ஆவார்.

இச்சம்பவத்தில் இறந்தோர் எண்ணிக்கை இவருடன் ஐந்தாக அதிகரித்துள்ளது. (இ-15)

சாரணர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ். மாவட்ட சாரணர்கள், திரிசாரணர்கள், சாரண ஆசிரியர்கள், பரியோவான் முதலுதவிப் படையினர், சாரணிய வழிகாட்டிகள் அனைவருக்குமான கூட்டம் ஒன்று இன்று வியாழன் பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

சேலத்தில் குண்டு வெடித்து எட்டுப் பேர் பலி!

புதுடில்லி ஜூலை 13

சேலத்திற்கு அருகில் வாழைப்பாடி கிராமத்தில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் குண்டு ஒன்று வெடித்ததில் 8 பேர் பலியாகினர். மேலும் 17பேர் காயங்களுக்கு உள்ளாகினர்.

வாழைப்பாடி பொலிஸ் நிலையம் அருகில் தேநீர்ச் சாலையில் தேநீர் அருந்திக் கொண்டிருந்தோரே பலியானவர்கள் ஆவர்.

வான் ஒன்றில் வந்தவர்கள் எறிந்த குண்டே வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. [ஐ-எ]

கல்வி பகுதியினருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 12

சண்டிலிப்பாய், தெல்லிப்பளை கோட்டங்களைச் சேர்ந்த நிதி உதவியாளர்கள், லிகிதர்கள் ஆகியோரை யாழ். கல்வி வலயம் 1 பணிமனையில் இன்று மு. ப 10 மணிக்கு சமூகமளிக்குமாறு கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

* * *

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை உறுப்பினர்களாக உள்ள கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், கல்வியாளர்கள் ஆகியோரை இன்று நடைபெறவுள்ள கல்வி மேம்பாட்டுப் பேரவைக் கூட்டத்தில் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. [ஐ]

ராணுவ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

றும் தொடர்ந்து நடத்தப்பட்டன.

எனினும் ஷெல், விமானத் தாக்குதல்களின் உக்கிரம் நேற்று குறைந்து காணப்பட்டன.

இரு பொது மக்களின் சடலங்கள்நேற்று மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டன.

நேற்றைய தாக்குதல் சம்பவங்களில் 10 பேர் வரை காயமடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் கொல்லப்பட்ட பல பொதுமக்களின் சடலங்கள் [illegible] நிலையில் கிடப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

முக்கிய அறிவித்தல்

பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கத்தில் நிவாரண முத்திரை வைத்திருப்பவர்கள் யாவரும் சாவகச்சேரி கிளையிலும் யாழ்ப்பாண கிளையிலும் நிவாரணப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கம்.

[37510]

கண்ணீர் அஞ்சலி

10-7-95 இல் அகாலமரணமடைந்த
நாரந்தனை கிழக்கைச் சேர்ந்த
இராசரெத்தினம் ஆனந்தராசாவின்
இழப்பால் துயர்உற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றேன்.

[illegible]

[ஸ்ரீ முருகன் ச. [illegible] (37516)

தகவல் தரவும்

சண்டிலிப்பாய் மத்தியில் வசிப்பவர்களாகிய
திரு. செ. தனபாலசிங்கம்
திருமதி மாலினி பாஸ்கரன்
ஆகியோர்
இருக்கும் இடத்தை அறிய விரும்புகின்றோம்

தகவல்
குகன் ஸ்ருடியோ
பருத்தித்துறை.

(சி-1642)

குடும்ப நல உத்தியோகத்தர்களின் வருடாந்த பொதுக் கூட்டம்

மேற்படி கூட்டம் முன்னர் அறிவித்தபடி 16-07-1995இல் நாவலர் வித்தியாலயத்தில் நடைபெறமாட்டாது என்பதையும் கூட்டத்திற்கான திகதி பின்னர் கு. ந. உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
க. அல்பிரட்.

[37508]

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு

முக்கிய கூட்டம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு முற்றாக செயலிழந்து இருப்பதால் இடம்பெயர்ந்த மக்கள், அலுவலர்கள் யாவரினதும் விபரங்களை அறிவதற்கும் எமது அலுவலகத்தை மீள இயக்க வைப்பதற்குரிய வழி வகைகளை ஆராய்வதற்குமாக 14-07-95 வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ள கூட்டத்தில் எமது அலுவலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

து.வைத்திலிங்கம்
பிரதேச செயலர்,
சண்டிலிப்பாய்.

[37505]

அறிவித்தல்

பாடசாலை மதிய உணவு முத்திரைக்கான விநியோகம்

வேலணை ப. நோ. கூ. சங்க எல்லைக்குட்பட்ட பாடசாலை மதிய உணவு முத்திரைக்குரிய பொருள்களைப் பெற்றுக் கொள்ளும் பாவனையாளர்கள் 13-07-1995 ஆம் திகதி தொடக்கம் ஆடி மாதத்துக்குரிய பொருள்களைத் தாமதமின்றி உடன் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பொதுமுகாமையாளர்,
வேலணை ப. நோ. கூ. சங்கம்.

[சி-1641]

அறிவித்தல்

த. பொ. மே. நிறுவன பணியாளர்கள் சந்திக்கவும்

த. பொ. மே. நிறுவனத்தில் பணிபுரியும் சகல பணியாளர்களும் த. பொ. மே. நிறுவனத்தின் யாழ் மாவட்ட செயலகத்தில் தற்காலிகமாக இயங்கும் காரியாலயத்தில் இன்று 9.00 மணியிலிருந்து சந்திக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

த. பொ. மே. நிறுவனம்

(சி/1645)

யாழ். வணிகர் கழகம் விடுக்கும்

முக்கிய அறிவித்தல்

தற்போதைய சூழ் நிலையில் பொதுமக்கள் அனைவரின் நலன் கருதி எமது கழக எல்லைக்குட்பட்ட சகல வணிக நிலையங்களும் கிழமை நாட்களில் தினமும் திறந்து மக்களுக்கான சேவையைச் செய்யுமாறு அனைத்து வணிக உரிமையாளர்களையும் பணிவன்புடன் வேண்டுகிறோம்,

யாழ். வணிகர் கழகம்
(சி/ 1644)

கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை பிரதேச சபை ஊழியர்

இராசரத்தினம் ஆனந்தராசா

(நாரந்தனை கிழக்கு ஊர்காவற்றுறை)

10-7-1995 காலை அகாலமரணமானார். அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஊர்காவற்றுறை பிரதேச சபை
விசேட ஆணையாளரும்,
உத்தியோகத்தர்களும்.

(37515)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 13-07-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.